
# முப்படை பயிற்சி மையம்

# *SAMPLE PDF OF BOOKS FOR SSC GD & RAILWAY EXAMS*




## பொது அறிவுக்களஞ்சியம்


**Note:** **தமிழ் Medium புத்தகம் எவ்வாறு அமைந்துள்ளதோ அதேபோல் English Medium புத்தகமும் அமைந்திருக்கும்**










முப்படை பயிற்சி மையம்™

The Best Defence Training Academy

# பொது அறிவு களஞ்சியம்

***MUPPADAI TRAINING ACADEMY***

***VELLORE CAMPUS***

*Near to Sree Krishna college of Engineering, Muppadai Block, Unai, Anaicut,*

***Vellore - 632 101***

*Tamilnadu*

*Contact : 7200 400 395 / 398*

***MUPPADAI TRAINING ACADEMY***

***TRICHY CAMPUS***

*Near Sri Renga Polytechnic College,MAM College Bus Stop, Siruganoor, Mannachanallur Taluk,* ***Trichy – 621 105***

*Tamilnadu*

*Contact : 8111 070 706 / 708*

***Our Institute offers Online & Offline classes & Physical Training***

***www.muppadaitrainingacademy.com***

***MTA PUBLICATIONS***

# பொருளடக்கம்


| வ.எண். | பாடம் | பக்கம் எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1. | வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | 01 – 02 |
| 2. | சிந்து சமவெளி நாகரிகம் | 02 – 05 |
| 3. | வேதகாலம் | 06 – 08 |
| 4. | மகதம் மற்றும் மௌரியப் பேரரசு | 08 – 13 |
| 5. | புத்த சமயம் | 13 – 15 |
| 6. | சமண சமயம் | 15 – 16 |
| 7. | குப்தர்கள் | 17 – 20 |
| 8. | ராஜபுத்திரர்கள் | 20 – 21 |
| 9. | டெல்லி சுல்தான்கள் | 21 – 24 |
| 10. | விஜயநகரம் மற்றும் பஹ்மனி சாம்ராஜ்யங்களின் காலம் | 24 – 27 |
| 11. | முகலாயர்கள் | 27 – 31 |
| 12. | மராத்தியர்களின் வரலாறு | 31 – 33 |
| 13. | சங்க காலம் | 34 – 39 |
| 14. | ஐரோப்பியர்களின் வருகை | 40 – 45 |
| 15. | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 45 – 49 |
| 16. | சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 49 – 54 |
| 17. | இந்திய தேசிய இயக்கம் | 55 – 65 |
| 18. | இந்திய வரலாற்றின் காலக்கோடு அட்டவணை 1806 – 1857 | 65 – 66 |
| 19. | இந்திய வரலாற்றின் காலக்கோடு அட்டவணை 1857 – 1947 | 66 – 67 |
| 20. | உலக வரலாறு | 67 – 73 |
| 21. | முக்கியமான போர்கள் | 73 – 73 |
| 22. | முக்கியமான கவர்னர் ஜெனரல் மற்றும் சாதனைகள் | 74 – 74 |
| 23. | இந்தியாவின் கவர்னர் ஜெனரல் | 74 – 77 |
| 24. | முக்கிய இந்திய தேசிய காங்கிரஸ் அமர்வுகள் | 77 – 78 |
| | **புவியியல்** | |
| 1. | பேரண்டம் மற்றும் சூரியக்குடும்பம் | 79 – 83 |
| 2. | நிலநடுக்கம் | 83 – 84 |
| 3. | எரிமலைகள் | 84 – 85 |
| 4. | பாறைகள் மற்றும் மண் | 85 – 90 |
| 5. | நிலத்தோற்றங்கள் | 90 – 92 |
| 6. | வளிமண்டலம் | 93 – 97 |
| 7. | வானிலை மற்றும் காலநிலை | 97 – 101 |
| 8. | நீர்க்கோளம் | 101 – 104 |
| 9. | கண்டங்களை ஆராய்தல் | 104 – 116 |
| 10. | இந்தியா – அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு | 117 – 128 |

| | | |
|---|---|---|
| 11. | இந்தியா – காலநிலை மற்றும் தாவரங்கள் | 129 – 135 |
| 12. | இந்தியா – வேளாண்மை | 135 – 148 |
| 13. | இந்தியா – வளங்கள் மற்றும் தொழிலகங்கள் | 148 – 160 |
| 14. | இந்தியா – மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் | 160 – 170 |
| 15. | மனிதனும் சுற்றுச் சூழலும் | 170 – 172 |
| 16. | உயிர்க்கோளம் | 173 – 175 |
| 17. | இந்தியாவில் உள்ள முக்கிய சரணாலயங்களின் பட்டியல் | 176 – 176 |
| **இந்திய அரசியலமைப்பு** | | |
| 1. | அரசியல் வகைபாடுகள் | 177 – 180 |
| 2. | அரசியலமைப்பு உருவான வரலாறு | 180 – 184 |
| 3. | இந்திய அரசியலமைப்பு | 184 – 187 |
| 4. | இந்திய அரசியலமைப்பின் முகவுரை | 187 – 188 |
| 5. | யூனியன் மற்றும் அதன் ஆட்சிப் பரப்பும் | 188 – 190 |
| 6. | குடியுரிமை | 190 – 192 |
| 7. | அடிப்படை உரிமைகள் | 192 – 195 |
| 8. | நெறிமுறைக் கோட்பாடுகள் | 195 – 197 |
| 9. | அடிப்படைக் கடமைகள் | 197 – 198 |
| 10. | அரசியலமைப்புத் திருத்தம் | 199 – 200 |
| 11. | மத்திய நிர்வாகத் துறை | 200 – 209 |
| 12. | பாராளுமன்றம் | 210 – 214 |
| 13. | மாநில நிர்வாகத் துறை | 214 – 217 |
| 14. | நீதித்துறை | 218 – 221 |
| 15. | உள்ளாட்சி அமைப்பு | 221 – 224 |
| 16. | அரசியலமைப்பு அமைப்புகள் | 225 – 228 |
| 17. | அரசியலமைப்புச்சாரா அமைப்புகள் | 228 – 231 |
| 18. | லோக்பால் | 231 – 231 |
| 19. | லோக் ஆயுக்தா | 231 – 231 |
| 20. | முக்கியமான திருத்தங்கள் | 232 – 236 |
| **பொருளியல்** | | |
| 1. | தேசிய வருமானம் | 237 – 239 |
| 2. | மேம்பாட்டை அறிவோம் | 240 – 242 |
| 3. | பணம் மற்றும் பணக் கொள்கை | 242 – 248 |
| 4. | இந்தியாவில் பெண்களுக்கான முக்கிய நலத் திட்டங்கள் | 248 – 249 |
| 5. | பொருட்கள் மற்றும் சேவை வரி முக்கியமான குறிப்புகள் (GST) | 249 – 249 |
| 6. | மாநிலங்கள் வாரியாக உற்பத்தி தரவரிசை | 250 – 250 |
| 7. | நிதி அவசரநிலை பிரகடனம் - சட்டம் 360 | 250 – 251 |
| 8. | இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் பட்டியல் | 251 – 251 |
| 9. | நிதி ஆணைக்குழு மற்றும் குழுக்கள் | 251 – 253 |

| | | |
|---|---|---|
| 10. | இந்தியாவிலுள்ள வங்கி மற்றும் நிதிக் குழுக்கள் | 253 – 257 |
| 11. | நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள் (SDG) | 257 – 258 |
| 12. | ஐந்து ஆண்டு திட்டங்கள் | 258 – 260 |
| 13. | சர்வதேச பொருளாதார அமைப்புகள் | 260 – 262 |
| 14. | பொது நிதி பட்ஜெட் | 262 – 264 |
| | **பொது அறிவுகள்** | |
| 1. | உலகில் புகழ்பெற்ற பத்திரிகை பெயர்கள் | 265 – 265 |
| 2. | இந்திய கடற்படை அட்மிரல்கள் | 265 – 266 |
| 3. | இந்திய மாநிலங்கள் மற்றும் மாநில அந்தஸ்து பெற்ற நாள் | 266 – 266 |
| 4. | இந்திய நதிகள் மற்றும் அவற்றின் தோற்றம் | 266 – 267 |
| 5. | இந்தியாவின் மிகப் பெரிய நூலகங்களின் பட்டியல் | 267 – 269 |
| 6. | இந்தியாவின் முதல் பெண்கள் பட்டியல் | 269 – 270 |
| 7. | இந்தியாவின் முதல் ஆண்கள் பட்டியல் | 271 – 274 |
| 8. | இந்தியாவிலுள்ள உலக பாரம்பரியக் களங்களின் பட்டியல் | 274 – 275 |
| 9. | இந்தியாவில் உள்ள அணைகள் | 275 – 278 |
| 10. | இந்தியாவில் உள்ள முக்கிய சரணாலயங்கள் | 278 – 279 |
| 11. | இந்திய முப்படைகளின் கூட்டு பயிற்சி | 279 – 280 |
| 12. | இந்தியாவின் முதலமைச்சர் மற்றும் ஆளுநர் 2023 பட்டியல் | 280 – 281 |
| 13. | ஆற்றங்கரையில் அமைந்துள்ள முக்கிய இந்திய நகரங்கள் | 282 – 284 |
| 14. | 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு | 284 – 285 |
| 15. | நாட்டின் தலைநகரங்கள் மற்றும் நாணயம் | 285 – 289 |
| 16. | இந்தியாவில் உள்ள முக்கிய துறைமுகங்கள் | 290 – 290 |
| 17. | சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தலைமையகம் | 291 – 292 |
| 18. | முக்கிய எல்லைக் கோடுகள் | 292 – 294 |
| 19. | இந்தியாவின் முக்கியமான திருவிழாக்கள் | 294 – 295 |
| 20. | முக்கிய விருதுகள் மற்றும் அதன் துறைகள் | 295 – 299 |
| 21. | அணுமின், அனல்மின் மற்றும் நீர்மின் நிலையங்கள் | 300 – 302 |
| 22. | இந்தியாவில் பிரபலமான விளையாட்டு வீரர்கள் | 302 – 305 |
| 23. | புத்தகங்கள் மற்றும் அவற்றின் ஆசிரியர்கள் | 305 – 308 |
| 24. | இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற கோவில்களின் பட்டியல் | 308 – 309 |
| 25. | மாநில சின்னங்கள் | 309 – 310 |
| 26. | முக்கிய நாட்கள் | 310 – 315 |
| 27. | முக்கிய ஏரிகள் | 315 – 316 |
| 28. | இந்தியாவில் உள்ள புலிகள் காப்பகங்கள் மற்றும் வனவிலங்கு சரணாயலம் | 316 – 321 |
| 29. | இந்தியாவில் விமான நிலையம் ரயில் நிலையங்கள் மற்றும் சாலைகள் | 322 – 327 |
| 30. | முக்கிய மலைத்தொடர்கள், சமவெளி மற்றும் பீடபூமிகள் | 327 – 329 |

# அறிவியல்


| வ.எண். | பாடம் | பக்கம் எண் |
|---|---|---|
| | **இயற்பியல்** | |
| 1. | மின்னியல் (ம) மின்னோட்டவியல் | 330 – 331 |
| 2. | பாய்மங்கள் | 332 – 332 |
| 3. | வெப்பம் | 332 – 333 |
| 4. | ஒளியியல் | 333 – 334 |
| 5. | ஒலி | 335 – 335 |
| 6. | விசை | 335 – 336 |
| 7. | காந்தவியல் | 336 – 336 |
| 8. | இயற்பியலில் முக்கியமான கண்டுபிடிப்புகள் | 336 – 337 |
| 9. | அறிவியல் கருவிகள் (ம) அவற்றின் பயன்பாடுகள் | 337 – 338 |
| 10. | அறிவியலின் கிளைகள் | 338 – 338 |
| 11. | மாறிலிகளின் மதிப்புகள் | 339 – 340 |
| 12. | அளவிடும் மீட்டர்கள் | 340 – 340 |
| 13. | SI Units | 341 – 342 |
| 14. | Father's of Science | 342 – 342 |
| | **வேதியியல்** | |
| 1. | அமிலங்கள் காரங்கள் மற்றும் உப்புகள் | 343 – 343 |
| 2. | தனிமங்களின் வகைப்பாடு | 343 – 345 |
| 3. | அணு அமைப்பு | 345 – 346 |
| 4. | வேதிவினைகள் (ம) கரைசல்கள் | 346 – 347 |
| 5. | நம்மை சுற்றியுள்ள பொருட்கள் | 348 – 348 |
| 6. | உரங்கள் | 348 – 349 |
| 7. | தனிமங்கள், அமிலம் மற்றும் காரம் (ம) வேதிச்சேர்மங்களின் பயன்கள் | 349 – 352 |
| 8. | வேதியியல் வாய்ப்பாடு | 352 – 353 |
| 9. | தனிம வரிசை அட்டவணை | 353 – 359 |
| | **உயிரியல்** | |
| 1. | திசுத்தொகுப்பு | 360 – 360 |
| 2. | ஊட்டச்சத்து (ம) நோய்கள் | 360 – 361 |
| 3. | மனித உடல் | 361 – 365 |
| 4. | செரிமான நொதிகள் | 365 – 365 |
| 5. | நாளமில்லா சுரப்பிகள் & நொதிகள் | 365 – 368 |
| 6. | மருத்துவ கண்டுபிடிப்புகள் | 368 – 369 |
| 7. | வைட்டமின் குறைப்பாட்டினால் ஏற்படும் நோய்கள் | 369 – 375 |
| 8. | நோய்கள் | 375 – 379 |

# பொது அறிவு

## வரலாறு

## 1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

➢ ***வரலாற்றுக்காலம்:***
*அக்காலத்தில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றி எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் மற்றும் பிற ஆதாரங்கள் உடைய காலத்தையே வரலாற்றுக் காலம் என்கிறோம்.*

➢ ***வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:***
*வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பது எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் இல்லாத காலத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றி படிமங்கள் புதைபொருள்கள் எலும்புகள் ஆகியவற்றின் மூலம் தெரிந்துகொள்ள முடியும் அக்காலத்தையே வரலாற்றுக்கு முந்தைய காலம் என்கிறோம்.*

- *பழைய கற்காலம் (கி.மு.1000 ஆண்டுகள்)*
- *மெசோலிதிக்*
- *புதிய கற்காலம்(கி. மு. 10000 - கி.மு.4000)*

- நவீன மற்றும் அழிந்துபோன அனைத்து பெருங்குரங்கு இனங்கள் அழைக்கப்படுவது – **ஹோமினிட்**
- ஹோமினின் - **விலங்கியல் பழங்குடி இனம், மனித மூதாதையர்களின் உறவினர்கள், அதன் தொடர்புடைய நவீன மனிதர்களையும் (ஹோமோ சேப்பியன்ஸ்) குறிக்கும்**.
- ஹோமினின் இனங்கள் - **நியாண்டர்தால், ஹோமோ எரக்டஸ் ஹோமோ ஹெபிலிஸ், ஆஸ்ட்ரோலோபித்திசைன்கள்**
- தகவல் பரிமாறும் திறன் பெற்றவை – **ஆஸ்ட்ரலோபித்திசைன்கள்**
- முதன் முதலில் கருவிகள் செய்த மனித மூதாதையர் இனம் - **ஹோமோ ஹெபிலிஸ் (ஆப்பிரிக்கா – சுமார் 2.6. மில்லியன் ஆண்டுகளுக்கு முன்)**
- ஹோமோ எரக்டஸ் எர்காஸ்டர் இனம் தோன்றிய காலம் - **சுமார் 2 (ம) 1 மில்லியன் ஆண்டுகள் இடையில்**
- நவீன மனிதர்கள் - **(அறிவுக் கூர்மையுடைய மனிதன்) ஹோமோ சேப்பியன்ஸ் (சுமார் 3,00,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது)**
- சிம்பன்சி மற்றும் பிக்மி சிம்பன்சி (போனோபோ) வகை இனங்கள் - **நமக்கு, நெருக்கமான, தற்போதும் உயிர்வாழும் உயிரினங்களாகும்.**
- மனித (மூதாதையர்களின் புதைபடிவ எலும்புகள்) பிரிப்பு – **ஹோமோ எபிலிஸ், ஹோமோ எரக்டஸ், நியாண்டர் தாலென்சிஸ்.**
- கற்கருவிகளின் பயன்பாடுகள் அடிப்படையில் பிரிவு – **தொடக்கால கற்கருவிகள் சேர்க்கை, ஓல்டோவான் தொழில்நுட்பம், கீழ், இடை, மேல் பழங்கற்கால பண்பாடுகள், இடைக்கற்காலப் பண்பாடுகள்.**
- மனித மூதாதையர்களால் உருவாக்கப்பட்ட தொடக்கக் காலக் கற்கருவிகள் கிடைத்துள்ள இடம் - **கென்யாவில் உள்ள லோமிக்குவி (3.3 மில்லியன் ஆண்டுகள் முற்பட்டவை)**

➢ **மேல் பழங்கற்காலப் பண்பாடு**

- மேல் பழங்கற்காலப் பண்பாடு - **இடைப் பழங்கற்காலப் பண்பாட்டை தொடர்ந்து வந்த பண்பாடு.**
- கற்கருவிகள் தொழில்நுட்பத்தில் சிறப்பான கூறுகள் மற்றும் புதிய நுட்பங்கள் ஏற்பட்ட காலம் - **மேல் பழங்கற்காலப் பண்பாடு.**
- நீண்ட அறுக்கும் தகடுகளும், பியூரின் எனப்படும் உளிகளும் உருவாக்கப்பட்ட காலம் - **மேல் பழங்கற்காலப் பண்பாடு.**
- நவீன மனிதர்கள் தோன்றிய பகுதி - **சப் சஹாரா என்றழைக்கப்படும், ஆப்பிரிக்காவின் சஹாராவிற்கு தெற்குப் பகுதி.**

முப்படை பயிற்சி மையம்

- ஐரோப்பாவில் வாழ்ந்த மனிதர்கள் - **குரோ – மக்னான்கள்.**
- கருவிகள், கலைப் பொருட்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டவை - **கொம்புகள், தந்தங்கள்.**
- மேல் பழங்கற்காலக் கருவிகள் - **ஊசிகள், தூண்டில் முட்கள், குத்தீட்டிகள், ஈட்டிகள்.**
- கல்லிலும், எலும்பிலும் செதுக்கப்பட்ட பெண் தெய்வச் சிற்பங்களின் பெயர் - **வீனஸ்**
- லாஸ்கா பாறை ஓவியங்கள் - **மேங்கு பிரான்ஸ், 17000 வருடங்கள் பழமையானவை.**

➢ **பனிக் காலம்**

- தற்காலத்திற்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் பல பாகங்கள் பனியாலும், பனிப்பாளங்களாலும் மூடப்பட்டு இருந்த காலம் - **பனிக்காலம்.**

➢ **இடைக்கற்காலப் பண்பாடு**

- பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட கற்கால பண்பாடு - **இடைக்கற்காலப் பண்பாடு.**
- சிறு நுண் கற்கருவிகள் பயன்படுத்திய காலம் - **இடைக் கற்காலம் (சிறு நுண் கற்கருவிகள் - மைக்ரோலித்திக்)**
- இடைக்கற்கால மக்கள் செய்த கற்கருவிகள் - **5 செ.மீ அளவிற்கும் குறைவான அளவுள்ள சிறுசிறு செய்பொருள்கள்.**
- இடைக் கற்கால கருவிகள் - **கூர்முனைகள், சுரண்டும் கருவி, அம்பு முனைகள், முக்கோணம் சரிவகம் போன்ற கணிதவடிவியல் கருவிகள். (பிடிகள் உண்டு)**

➢ **புதிய கற்காலப் பண்பாடும் வேளாண்மையின் தொடக்கமும்**

- புதிய கற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டவை - **வேளாண்மை, விலங்குகளை பழக்குதல்.**
- வளமான பிறை நிலப்பகுதி என்றழைக்கப்படுவது - **எகிப்து மற்றும் மெசபடோமியா, சிந்துவெளி, கங்கை சமவெளி, சீனாவின் செழுமையான பகுதிகள்.**
- காலம் - **பொ.ஆ.மு. 10,000 – பொ.ஆ.மு.5000, வேளாண்மை நடவடிக்கை தொடங்கி விட்ட காலம்.**

## *2. சிந்து சமவெளி நாகரிகம்*

➢ **சிந்துவெளி நாகரிகம்**

- ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் நாகரிகம் - **சிந்துவெளி நாகரிகம்.**

➢ **ஹரப்பா (புதையுண்ட நகரம்)**

- ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை முதன் முதலில் நூலில் விவரித்தவர் - **சார்லஸ் மேசன்.**
- பாழடைத்த செங்கற்கோட்டை, உயரமான சுவர்கள், கோபுரங்கள் கொண்ட மலைபோன்ற கட்டமைப்பு - **ஹரப்பா நாகரிகம் (வடமேற்கு இந்தியா – பாகிஸ்தான் பகுதி)**
- பொறியாளர்கள் லாகூர் - கராச்சி இரயில் பாதை அமைத்த ஆண்டு - **1956.**
- ஹரப்பா மொகஞ்சதாரோ நகரங்களை அகழாய்வு செய்த ஆண்டு - **1920.**
- 1924ல் ஹரப்பா-மொகஞ்சதாரோ இடையே பொதுவான அம்சங்கள் உள்ளது என கண்டறிந்தவர் - **ஜான் மார்ஷல்.**
- நாகரிகம் என்ற சொல் பண்டைய லத்தின் மொழி வார்த்தை சிவிஸ் (civis) சிவிஸ் என்பதன் பொருள் - **நகரம்.**
- நிலத்தடியை ஆய்வு செய்ய பயன்படுத்தும் கருவி - **காந்தப்புல வருடி (MAGNETIC SCANNER)**
- புதையுண்ட பொருட்களை கண்டறிய பயன்படுத்தப்படும் முறை - **ரேடார் கருவி (தொலை நுண்ணுணர்வு முறை)**

- இந்திய தொல்லியல் துறை - **ASI (Archaelogical Survey of India)**
- ASI நிறுவப்பட்ட ஆண்டு, நிறுவியவர் - **1861, அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்.**
- இந்திய தொல்லியல் துறையின் தலைமையகம் (ASI) உள்ள இடம் - **புதுடெல்லி.**
- ஹரப்பா நாகரிகம் மொகஞ்சதாரோவை விட பழமையானது.

➢ **ஹரப்பா நாகரிக காலவரையறை:**

- புவி எல்லை - **தெற்கு ஆசியா**
- காலம் - **வெண்கலக்காலம் (பொ.ஆ.மு 3300-1900)**
- காலம் - **கதிரியக்க கார்பன் வயது கணிப்பு முறை மூலம் ஆய்வு**
- பரப்பு - **13 லட்சம் ச.கி.மீ**
- நகரங்கள் - **6 பெரிய நகரங்கள்.**
- கிராமங்கள் - **200க்கும் மேற்பட்டவை.**

| **ஹரப்பா நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்** | | |
|---|---|---|
| • மந்தா<br>• ராகிகர்கி<br>• ஹரப்பா<br>• மிட்டதாய் | • காலிபங்கள்<br>• கன்வேரிவாலா<br>• மொஹஞ்-சதாரோ<br>• அம்ரி | • கோட்டிஜி<br>• தோலவிரா<br>• லோத்தல் |

- ஹரப்பா நாகரிகம் - **நகரநாகரிகம்**
- ஹரப்பா நாகரிகத்தின் சிறப்புக் கூறுகள் - **சிறந்த நகர திட்டமிடல், கட்டிடக் கலை வேலைப்பாடு, தூய்மை, சுகாதார முன்னுரிமை, தர எடைகள், அளவீடுகள்.**

➢ **ஹரப்பா நகர திட்டமிடல்**

1. மேல் நகர அமைப்பு - **நகர மேற்குப்பகுதி உயரமானது. இது கோட்டை எனப்பட்டது. பெருங்குளம், தானியக் களஞ்சியம் இருத்தல்.**
2. கீழ்நகர அமைப்பு - **நகர கிழக்குப் பகுதி தாழ்வானது. அதிக பரப்பு உடையது. இது பொதுமக்கள் வசிக்கும் இடம்.**

- மெஹெர்கர் - **சிந்துவெளி நாகரிகத்திற்கு முன்னோடி**

➢ **புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடம்.**

- அமைந்துள்ள இடம் - **பாகிஸ்தான் மாநிலம் - போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கு**
- தொழில் - **வேளாண்மை, கால்நடை வளர்ப்பு (சான்றுகள் உள்ளன)**
- காலம் - **பொ.ஆ.மு. 7000, ஒட்டிய காலம்.**

➢ **ஹரப்பா-தெருக்கள் அமைப்பு**

- ஹரப்பா நாகரிகத்தில் தெருக்களின் சிறப்புக் கூறுகள் - **சட்டக வடிவமைப்பு, நேரான தெருக்கள், வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் செல்லுதல், தெருக்கள் செங்கோணத்தில் வெட்டிக் கொள்ளும்படி இருந்தன**
- வீடுகள் கட்டப்பயன்படுத்தியவை - **செங்கற்கள், சுண்ணாம்பு கலவைகள்.**
- நகரங்களின் சிறப்பான ஓர் கூறு - **கழிவுநீர் வடிகால் அமைப்பு.**

முப்படை பயிற்சி மையம்

- **பெருங்குளம்**

- பெருங்குளத்தின் வடிவம் - **செவ்வக வடிவம், அகலமானது.**
- பெருங்குளத்தில் நீர் கசியாமல் இருக்கப் பயன்படுத்தப்பட்டவை - **இயற்கைத் தார்.**
- குள அமைப்பு - **வடபுறத்திலிருந்தும், தென்புறத்திலிருந்தும் குளத்திற்குச்செல்ல படிக்கட்டுகள், மூன்று புறமும் அறைகள்.**

- **தானியக் களஞ்சியம்**

- தானியக் களஞ்சிய கட்டமைப்பு - **செங்கற்கள் அடித்தளம், பெரிய, உறுதியான அமைப்பு.**
- தானியக் களஞ்சியத்தில் சேமித்த தானியங்கள் - **கோதுமை, பார்லி, தினை வகைகள், எள் மற்றும் பருப்பு வகைகள்.**
- ஹரியானாவில் கண்டுபிடிக்கப்பட்ட தானியக்களஞ்சியம் உள்ள இடம் - **ராகிகர் (முதிர்ச்சியடைந்த ஹரப்பா காலம்)**
- மொஹஞ்சதாரோவில் இருந்த பெரிய கூட்ட அரங்கின் அமைப்பு - **20 தூண்கள் 4 வரிசைகள் கொண்டது.**
- ஹரப்பா மக்கள் வணிகம் செய்த பகுதிகள் - **மெசபடோபியா (ஆதாரம் - ஈராக், குவைத், சிரியா பகுதிகளைக் குறிக்கும் முத்திரைகள் சுமேர் பகுதியில் கிடைத்துள்ளது)**
- மெலுக்கா என்னும் பகுதியிலிருந்து அணிகலன் வாங்கியதாக குறிப்பு எழுதியவர் - **நாரம்-சின் (அக்காடிய பேரரசு)**
- கப்பற்கட்டும் தளம் கண்டறியப்பட்ட இடம் - **லோத்தல் (குஜராத்)**
- குஜராத்தில் சபர்மதி ஆற்றின் துணையாற்றங் கரையில் அமைந்துள்ள இடம் - **லோத்தல்**
- அமர்ந்த நிலையிலுள்ள ஓர் ஆண் சிலை கண்டறியப்பட்ட இடம் - **மொகஞ்சதாரோ.**
- குஜராத்தில் கண்டறியப்பட்ட தந்தத்திலான அளவுகோலின் அளவீடு - **1704 மி.மீ வரை.**
- மனிதர்களால் முதலில் கண்டறியப்பட்டு, உபயோகப்படுத்தப் பட்ட உலோகம் - **செம்பு.**
- மொகஞ்கதாரோவில் கண்டறியப்பட்ட பெண்சிலையின் பெயர் - **நடனமாது (3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது)**
- மொகஞ்சதாரோவில் கண்டறியப்பட்ட பெண்சிலையை பார்த்தவர் - **சர் ஜான் மார்ஷல்.**
- கே.வி.டி என்பதன் விரிவு - **கொற்கை, வஞ்சி, தொண்டி**
- பாகிஸ்தானில் காணப்படும் இடங்களின் பெயர்கள் (தமிழ்ப் பகுதிகளை ஒத்தவை) - **கொற்கை, வஞ்சி, தொண்டி, மத்ரை, உரை, கூடல்கர்.**
- ஆப்கானிஸ்தானில் காணப்படும் தமிழ் துறைமுகப் பெயர்கள் - **பூம்புகார், கொற்கை.**

முப்படை பயிற்சி மையம்

| **சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்** | |
|---|---|
| **உடை** | • பருத்தி ஆடைகள்<br>• நூலைச் சுற்றி வைக்க சுழல் அச்சுக்கள்-நுற்றல்<br>• கம்பளி ஆடைகள் உபயோகம் |
| **அணிகலன்கள்** | • விலைமதிப்பற்ற நகைகள் பயன்பாடு<br>• ஆண், பெண் இருபாலரும் அணிந்தனர்.<br>• கழுத்தாணி, கையணி, வளையல்கள், மோதிரங்கள், காதணிகள் பயன்பாடு.<br>• தங்கம், வெள்ளி, தந்தம், சங்கு, செம்பு, சுடுமண் மற்றும் விலையுயர்ந்த கற்களால் ஆபரணங்கள் செய்யப்பட்டன.<br>• சிவப்பு நிற மணிக்கற்கள் (carnellan) பயன்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| **தொழில்** | • முதன்மைத் தொழில் அறியப்படவில்லை.<br>• வேளாண்மை,கைவினைப் பொருள்கள் செய்தல், போன்ற தொழிலில் ஈடுபட்டனர்.<br>• கால்நடை வளர்ப்பு இருந்தது.<br>• சக்கரத்தின் பயன் அறிந்திருந்தனர். |
| **மட்பாண்டங்கள்** | • மட்பாண்டங்கள் சக்கரத்தால் (கொண்டு) உருவாக்கி,தீயிலிட்டு சுடப்பட்டன.<br>• சிவப்பு வண்ணம் கொண்டவை. அதில் கருப்பு நில வேலைபாடுகள் இருந்தது. (விலங்குகள் உருவம்,வடிவியல் வடிவங்கள்) |
| **சமய நம்பிக்கை** | • சமயம் பற்றிய தகவல்கள் இல்லை.<br>• கிடைக்கப் பெற்ற பெண் சிலை மூலம் தெய்வ வழிபாடு இருந்தது அறியப்படுகிறது. |
| **கலைத்திறன்** | • பொம்மை வண்டிகள், தலை,கால் அசையக்கூடிய பசு பொம்மைகள், களிமண் குரங்கு, கொட்டைகளை கொரிக்கும் அணில் பொம்மைகள்,மண்ணால் ஆன நாய்கள், நடனமாடும் ஆண் பொம்மை-கிடைத்துள்ளன. |

- சிந்துவெளி மக்கள் அறியாத உலோகம் - **இரும்பு**
- முதல் எழுத்து வடிவம் உருவாக்கியவர்கள் - **சுமேரியர்கள்**
- மொஹஞ்சதரோவில் தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறும் இடத்தை உலகப் பாரம்பரிய தளமாக அறிவித்த நிறுவனம் - **யுனெஸ்கோ**
- ஹரப்பா நாகரிகம் சரியத் தொடங்கிய காலம் - **பொ.ஆ.மு. 1900**
- உலகின் மிகப்பழமையான நாகரிகங்களுள் ஒன்று - **சிந்துவெளி நாகரிகம்**
- பழமையான நான்கு நாகரிகங்களில் மிகப்பெரிய பரப்பளவு கொண்டது - **சிந்துவெளி நாகரிகம்**
- உலகின் முதல் திட்டமிடப்பட்ட நகரங்கள் உள்ள நாகரிகம் - **சிந்துவெளி நாகரிகம்**
- சுத்தம், சுகாதாரம், வடிகால் அமைப்பு உணர்வு மேலோங்கி இருந்த நாகரிகம் - **சிந்துவெளி நாகரிகம்**
- தொல்லியல் ஆய்வாளர்களுக்கான தரப்படுத்தப்பட்ட முறை - **கதிரியக்க கார்பன் வயது கணிப்பு முறை. (கதிரியக்க ஐசோடோப்)**
- கிசே பிரமீடு கட்டியவர் மற்றும் காலம் - **கு∴பு மன்னர் பொ.ஆ.மு.2500 (15 டன் எடை-சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டது)**
- மெசபடோமியா (சுமேரியர் காலம்) மன்னர் - **நம்மு**
- சின் என்ற சந்திர கடவுளுக்கு கட்டப்பட்ட ஊர் - **ஜிகரட் (நம்மு மன்னரால்)**
- ராமெசிஸ் என்பவரால் கட்டப்பட்ட இரட்டைக் கோயில்கள் உள்ள இடம் - **அபுசிம்பல் (எகிப்து அரசர் இரண்டாம் ராமெசிஸ்)**

➢ **ஹரப்பா நாகரிகத்தின் பரப்பளவு**

- மேற்கில் - **பலுகிஸ்தானின் மக்ரான் கடற்கரை வரை**
- கிழக்கில் - **காகர் - ஹாக்ரா நதி பள்ளத்தாக்கு வரை**
- வடகிழக்கில் - **ஆப்கானிஸ்தான்**
- தெற்கில் - **மகாராஷ்டிரா வரை.**

முப்படை பயிற்சி மையம்